

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.6.2023) முகாம் அலுவலகத்தில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமக்கு கூடுதல் பொறுப்பாக மின்சாரத்துறை வழங்கப்பட்டதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.6.2023) முகாம் அலுவலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி கூடுதல் பொறுப்பாக தமக்கு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை வழங்கப்பட்டதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



**"கடமை எனும் வாளெடுத்து,**
**கண்ணியம் எனும்**
**கேடயம் ஏந்தி,**
**கட்டுப்பாடு எனும்**
**கவசம் பூண்டு,**
**செயல்படுவோம்."**
**- அறிஞர் அண்ணா**

### தமிழ்நாட்டில் 5 மாதங்களில்

# 4.42 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை!

## அமைச்சர் க.ராமச்சந்திரன் பேட்டி!

சென்னை, ஜூன் 19-

2022-ஆம் ஆண்டில் மொத்தம் 4,07,139 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்த நிலையில் 2023-ஆம் ஆண்டில் மே மாதம் முடிய 5 மாதங்களிலேயே 4,42,337 வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளார்கள் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலா அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை சுற்றுலாத் துறையில் இந்திய அளவில் முதன்மை மாநிலமாக உருவாக்கிடும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். தமிழ்நாடு முழுவதும் சுற்றுலாத் துறையின்கீழ் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட அளவில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றி வருகின்றார்கள். தமிழர்களின் பராம்பரியம் மிக்க பொங்கல் திருவிழா, கோடை விழா உள்ளிட்ட பல்வேறு விழாக்கள் மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் ஊட்டி, கொல்லிமலை, ஏலகிரி உள்பட தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் சாகச சுற்றுலா மேம்பாட்டு திட்டப்பணிகளும் நடைபெற்று வருகின்றன. இதுபோன்ற பல்வேறு சுற்றுலா வளர்ச்சி நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் சுற்றுலா அலுவலர்களிடம் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது:



முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது. கொரோனாவிற்கு பிறகு 2021-ஆம் ஆண்டில் 57,622 ஆக இருந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2022 ஆம் ஆண்டில் 4,07,139 ஆக உயர்ந்து இந்த ஆண்டு 2023-ல் மே மாதம் வரை 5 மாத காலத்தில் மட்டும் 4,42,337-ஆக உயர்ந்துள்ளது.

இதே போன்று உள்நாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 2021-ல் 11,53,36,719-ஆக இருந்து 2022-ல் 21,85,84,846-ஆக உயர்ந்து, இந்த ஆண்டு 2023-ல் மே மாதம் வரை 5 மாத காலத்தில் 12,21,38,238 என உயர்ந்துள்ளது.

குறிப்பாக ஏப்ரல், மே ஆகிய 2 மாதங்களில் மட்டும் 1,74,564 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும், 5,56,48,084 உள்நாட்டு சுற்றுலா பயணிகளும் வருகை தந்துள்ளனர்.

தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வண்ணம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள். இந்த பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ள சுற்றுலா திட்டப்பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் விரைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும். சுற்றுலா மேம்பட்டு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதால் சம்மந்தப்பட்ட சுற்றுலா தலங்களுக்கு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பதுடன் அரசிற்கு அன்னிய செலாவணி வருவாயும், சுற்றுலா பயணிகளை நம்பி வாழும் உள்ளூர் மக்களுக்கு நிரந்தர வருவாயும் கிடைக்கும்.

சுற்றுலா செயல்பாட்டாளர்களை சுற்றுலாத் துறையில் பதிவு செய்ய அறிவுறுத்தி பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளின் படி தங்கள் மாவட்டங்களில் சுற்றுலா செயல்பாட்டாளர்கள் பதிவு செய்துள்ளார்களா என்பதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.லி.பாரதிதேவி, திட்ட பொறியாளர் பால் ஜெப ஞானதாஸ், சுற்றுலாத்துறை உதவி இயக்குநர்கள் ஜெ.ஜெயக்குமார், சு.சின்னசாமி, உதவி இயக்குநர் (மக்கள் தொடர்பு) சி.சீனிவாசன் உள்பட உள்பட உதவி செயற்பொறியாளர்கள் சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள், சுற்றுலா அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா; உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தான் செந்தில்பாலாஜியிடம் விசாரணை நடத்தப்பட்டதுன்னு மண் புழு பழனிசாமி சொல்லி இருக்காரே?

**போண்டி :** ஆமாய்யா; மிரட்டி டார்ச்சர் பண்ணி ஹார்ட் அட்டாக் வரவையுங்கன்னு தீர்ப்புல இருக்கா?

### பொய் வழக்குகளுக்கு துணை போகாமல்

# நீதிமன்றம் உண்மையைக் கண்டறிய உதவிட வேண்டும்!

## அரசு குற்றவியல் வழக்கறிஞர்கள் ஆய்வுக் கூட்டத்தில் தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா வலியுறுத்தல்!

சென்னை, ஜூன் 19-

"பொய் வழக்குகளுக்குத் துணைபோகாமல் நீதிமன்றங்கள் உண்மையைக் கண்டறிய உதவிட வேண்டும்" என்று அரசு குற்றவியல் வழக்கறிஞர்களை தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு அரசின் தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகமது ஜின்னா தலைமையில் நடைபெற்ற அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் ஆய்வுக் கூட்டத்தை தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு தொடங்கி வைத்தார்.

மாவட்ட அமர்வு நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை நடத்தும் மாவட்ட அரசு குற்றவியல் வழக்குரைஞர்களின் ஆய்வுக் கூட்டம் தமிழ்நாடு அரசின் தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகமது ஜின்னா தலைமையில் நேற்று முன்தினம் (17.06.2023) தலைமைச் செயலகத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தை தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு தொடங்கி வைத்து உரையாற்றினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாவட்ட அரசு குற்றவியல் வழக்குரைஞர்களாக அவர்கள் பொறுப்பேற்ற நாள் முதல் இதுவரை நடத்திய வழக்குகள் மற்றும் இவ்வழக்குகளில் அவர்கள் குற்றவாளிகளுக்கு பெற்றுத் தந்த தண்டனைகள் மற்றும் விடுதலைக்கான காரணங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

குற்ற வழக்குகளைச் சீரான முறையில் நடத்திடத் தேவையான உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் தீர்ப்பு தொகுப்புகளை அனைவருக்கும் வழங்கி மாநில தலைமை அரசு குற்றவியல் வழக்குரைஞர் பேசியதாவது:

குற்ற வழக்குகளை நடத்தும்போது ஏற்படும் சட்டச் சிக்கல்களுக்கு உரிய தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். அதே சமயம் குற்ற வழக்குகளை நடத்தும்போது தண்டனை வாங்கித் தர வேண்டும் என்ற ஒரே நோக்குடன் வழக்கினை நடத்தாமல் "நிரபராதிகள் தண்டிக்கப்படக்கூடாது" அதே சமயத்தில் "குற்றவாளிகள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பி விடக்கூடாது" என்கிற எண்ணத்தோடு வழக்குகளை நடத்த வேண்டும்.

அரசு குற்ற வழக்குரைஞர் காவல்துறையின் வழக்குரைஞர் அல்ல! அவர்கள் பொதுமக்களுக்கான வழக்குரைஞர்கள் என்பதை மனதில் கொண்டு செயல்பட வேண்டும்.

ஒரு சில காவல் அதிகாரிகள் ஜோடித்து போடும் பொய் வழக்குகளுக்குத் துணை போகாமல் நீதிமன்றம் மற்றும் பொதுமக்களுக்கு உண்மையை கண்டறிவதற்கு அரசு வழக்கறிஞர்கள் உதவிட வேண்டும்.

வழக்குகளை நடத்தும் போது காவல்துறையினர் எவரேனும் முழு ஒத்துழைப்பு வழங்கவில்லை எனில் சம்பந்தப்பட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அல்லது அந்த மாநகரத்தின் சம்பந்தப்பட்ட காவல் துறை ஆணையர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். அதன் பின்னரும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிடில் என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் காவல் துறை மேல் அதிகாரிகளிடம் பேசி உரிய தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

மாவட்ட அமர்வு நீதிமன்றங்களில் வழக்குகளை நடத்தும்போது ஏற்படும் சிக்கல்களுக்கு உடனடியாக தீர்வு காண அந்த மாவட்டத்தினுடைய பொறுப்பு உயர் நீதிமன்ற நீதிபதியின் வழிகாட்டுதல் தேவைப்படும் பட்சத்தில் உடனடியாக என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

குற்றவியல் நடைமுறை சட்டம் 321வது பிரிவின்படி தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன் எந்த நிலையிலும் ஒரு வழக்கை திரும்ப பெறுகிற அதிகாரம் அரசு குற்றவியல் வழக்குரைஞர்களுக்கு உள்ளதால் மிகவும் கவனத்துடனும் பொறுப்புடனும் வழக்கு திரும்ப பெறுகிற அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும்.

குறிப்பிட்ட வழக்குகளில் ஜாமீன் தருவது தவறு என கருதப்படுகின்ற சமயத்தில் ஜாமின் கொடுப்பதற்கு ஆட்சேபனண செய்யப்பட வேண்டும். மேலும், ஆட்சேபனைகளை மீறி நீதிமன்றம் ஜாமீன் வழங்கினால் அதனை ரத்து செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அவ்வப்போது, சட்டக் கருத்துகளை (Legal Opinion) உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும். தாமதம் செய்தால் மேல் முறையீடு செய்வதில் தாமதம் நிகழும். எனவே நீண்ட நாட்கள் நிலுவையில் வைக்காது உரிய காலத்திற்குள் கேட்கப்படும் சட்டக் கருத்துக்களை அனுப்பி வைக்க வேண்டும் என இக்கூட்டத்தின் வாயில் தங்களை கேட்டுக் கொள்கிறேன்

மேலும் வருங்காலங்களில் மாவட்ட குற்றவியல் வழக்குரைஞர்களின் பணிகள் அவ்வப்பொது ஆய்வு செய்யப்படும். திருப்திகரமாக பணி ஆற்றாதவர்கள் பற்றிய விபரங்கள் உரிய மேல் நடவடிக்கைக்காக அரசுக்கு அனுப்பப்படும். எனவே, பணியில் முழுக் கவனம் செலுத்தி நீதிமன்றங்களுக்கு சரியான முறையில் உதவி செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

குற்றவியல் நீதி அமைப்பில், குற்றவாளிகளை விசாரிக்கும் பொறுப்பு அரசுக்கு இருப்பதால், நீதிமன்றத்தில் அரசாங்கத்தின் பிரதிநிதியாகவும், நீதிமன்ற அதிகாரியாகவும் தாங்கள் செயல்படுவதால் மிகுந்த பொறுப்புடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கூறி இனி வருங்காலங்களில் தங்கள் பணிகளில் முழு கவனம் செலுத்தி நீதி மன்றங்களுக்கு நீதியை நிலை நாட்டிட சரியான வகையில் உதவி செய்திட வேண்டும் என்று தங்களை கேட்டு கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

இந்த ஆய்வுக் கூட்டம் நிறைவுற்றப் பின்னர், முதலமைச்சர் அவர்களை தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகமது ஜின்னா தலைமையில் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள், கூடுதல் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள் சந்தித்து பேசினார்கள்.

இக்கூட்டத்தில், சென்னை மாநகர அரசு குற்றவியல் வழக்குரைஞர் ஜி.தேவராஜ், விழுப்புரம் மாவட்ட குற்றவியல் வழக்குரைஞர் டி.எஸ்.சுப்பிரமணியன் மற்றும் திருவாரூர் மாவட்ட குற்றவியல் வழக்குரைஞர் ட்டி.மணிவண்ணன், சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையின் கூடுதல் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள் மற்றும் குற்றவியல் அரசு வழக்குரைஞர்கள் மற்றும் பிற குற்றவியல் வழக்குரைஞர்கள் கலந்து கொண்டனர்.

### கலைஞர் கோட்டம் திறப்பு விழா:

# திருவாரூரில் திரளாகப் பங்கேற்பீர்!

## புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!

புதுக்கோட்டை, ஜூன் 19-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நாளை (20.6.2023 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு உலகத் தமிழினத்தின் உன்னதத் தலைவராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வையொட்டி திருவாரூர் மாவட்டம், காட்டூரில் திருமதி.தயாளு அம்மாள் அறக்கட்டளை சார்பில் கட்டப்



பட்டுள்ள கலைஞர் கோட்டம் மற்றும் கலைஞர் அவர்களின் சிலை திறப்பு விழா கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மேற்கண்ட நிகழ்ச்சிகளில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள். இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள். மாவட்ட ஒன்றியக் குழுஉறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

### டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி!

# கல்லணை திறப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி!

திருச்சி, ஜூன் 19-

தஞ்சை டெல்டா மாவட்டங்களின் குறுவை நெல் சாகுபடிக்காக கல்லணை திறப்பு. விவசாயிகள் பெரும் மகிழ்ச்சி,

குறுவை சாகுபடிக்காக மேட்டூர் அணையில் 12 ம் தேதி திறக்கப்பட்ட நீர் இன்று காலை தஞ்சை மாவட்டம் கல்லணைக்கு வந்து சேர்ந்ததும் கல்லணையில் அமைச்சர் கே.என். நேரு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பழநிமாணிக்கம், இராமலிங்கம், மாநிலங்களவை உறுப்பினர் கல்யாணசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், க.அண்ணாதுரை, திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, மாவட்ட ஆட்சித்தலைவர்கள், மதகுகளை திறந்து வைத்து, நவதானியங்கள், மலர்களை தூவினர்...

முதல் கட்டமாக காவிரியில் வினாடிக்கு 500 கன அடி, வெண்ணாற்றில் 500 கனஅடி, கல்லணை, கொள்ளிடத்தில் 500 கன அடி கல்லணை கால்வாய் ஆற்றில் 100 கன அடி என 1600 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப் பட்டது.

இது குறித்து பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அமைச்சர் கே.என்.நேரு,

நீர் வரத்து அதிகரித்ததும் அதற்கேற்ப தண்ணீர் பகிர்ந்து அளிக்கப்படும்,

உரிய காலத்தில் நீர் திறப்பு பாசன ஆறுகள் தூர்வாரியதாலும் கடந்த ஆண்டுகளை விட கூடுதல் மகசூல் கிடைக்கும் என்றவர், தண்ணீர் விவசாயிகள் சிக்கனமாக பயன்படுத்த வேண்டுகோள் விடுத்தார்.

தஞ்சை, திருவாரூர். நாகை, மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களில் மொத்தம் 3, 42,696 ஏக்கர் பரப்பில் குறுவை நெல் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது..

கல்லணையிலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் கடைமடைப் பகுதிக்குச் செல்ல 7 முதல் 10 நாட்கள் ஆகும். தூர்வாரும் பணி இதுவரை 90 சதவீதம் நிறை வடைந்துள்ளது. தண்ணீர் சென்றடைவதற்குள் 100 சதவீதப் பணிகள் முடிவடைந்துவிடும்.

இந்தப் பாசனத்தின் மூலம், தஞ்சாவூர் மாவட்டத்தில் 1.08 லட்சம் ஏக்கரிலும், திருவாரூர் மாவட்டத்தில் 92 ஆயிரத்து 214 ஏக்கரிலும், நாகை மாவட்டத்தில் 22 ஆயிரத்து 805 ஏக்கரிலும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 93 ஆயிரத்து 750 ஏக்கரிலும், கடலூர் மாவட்டத்தில் 24 ஆயிரத்து 976 ஏக்கரிலும் என மொத்தம் 3.42 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் நீர் இருப்பு, நீர்வரத்து, எதிர்நோக்கு மழை, கர்நாடகவில் இருந்து நமக்குக் கிடைக்க வேண்டிய நீரின் அளவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு காவிரி டெல்டா பாசனப் பகுதிகளுக்குத் தேவைக்கேற்ப பகிர்ந்தளிக்கப்படும். மேட்டூர் அணையில் நீர் இருப்பின் அடிப்படையில் முறைப்பாசனம் நடைமுறைப்படுத்தப்படும் என்றார் அமைச்சர் நேரு.